## DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

ST.C.No. 2084/2021

P.W. 1 கண்ணன் த/பெ. சண்முகம்

நாள் 17.04.2026

BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அசா.1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வழக்கின் படி எதிரிக்கு ரூ.38,000/- கைமாற்று கடன் கொடுத்தேன் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். EXP5 மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு வட்டி ரூ.12% என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புரோ நோட்டு பற்றி வழக்கின் மனுவிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வட்டி குறிப்பிட்டுள்ள நிலையில் எதிரி வட்டி எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ரூ.38,000/-க்கு ரூ.100 க்கு மாதத்துக்கு 12% வட்டி என்ற நிலையில் அந்த வட்டி தொகையையும் சேர்த்து வட்டி சேர்த்தும் எனக்கு தொகை திருப்பி கொடுக்கும் வகையில் கொடுத்ததாகவும் சொல்லவில்லை.

வட்டியை கொடுக்காத நிலையில் புகாரிலோ, ஆணையுறுதி ஆவணத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லாத நிலையில் அசல் தொகையை கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அதற்கு மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு எந்த காரணமும் சொல்லவில்லை என்றால் ஆமாம். EXP5 ல் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் யார் என்றால் அவர் எனக்கு தெரிந்த சாட்சிகள் இல்லை. எதிரி தான் அழைத்து வந்தார். வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும், EXP5 உள்ள அனைத்து சங்கதிகளும் எதிரியின் கையொப்பம் போல் உள்ள அனைத்து சங்கதிகளும் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

EXP5 ல் குறிப்பிடப்பட்டியிருக்க கூடிய சாட்சிகள் என்ற விபரத்தில் த/பெ. தவிர வேறு எந்த முழுமையானவிவரங்களும் இல்லை என்றாலும், அவ்வாறு உண்மையில் EXP5 தயார் செய்யப்பட்டியிருக்கும் பட்சத்தில் அந்த விபரங்கள் நான் கேட்டு பெற்றிருப்பேன் என்றாலும், பெயரளவில் என்னால் தயார் செய்யப்பட்டது என்பதால் தான் EXP5 தவறாக உள்ளது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,
Mannargudi.